# தமிழ் வலைப்பதிவுகள் அதிகம் அரசியல் பேசுவதில்லை

சிங்கப்பூரில் சீன, மலாய், தமிழ் மொழிகளில் குறைவான, அதே நேரத்தில் துடிப்பான வலைப்பூக்கள் இயங்கி வந்தாலும் அவை ஆங்கில வலைப்பூக்கள் போல உள்ளூர் அரசியலை அதிகம் பேசுவதில்லை.

தாய்மொழி வலைப்பூக்கள் பற்றி கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வில் இது தெரிய வந்துள்ளது.

தாய்மொழி வலைப்பூக்கள் பற்றி சிங்கப்பூரில் நடத்தப்பட்ட முதல் ஆய்வின் முடிவுகளை அது நேற்று வெளியிட்டது.

சிங்கப்பூரர்களும் நிரந்தரவாசிகளும் இயக்கும் வலைப்பூக்களும், சிங்கப்பூரைப் பற்றிப் பேசும் வலைப்பூக்களும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

உள்ளடக்கம் குறைந்தது 50 விழுக்காடாவது சீனம், மலாய், அல்லது தமிழ் மொழியில் உள்ள வலைப்பூக்கள் மட்டும் ஆய்வில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

அந்த அடிப்படையில் சீனத்தில் 200, மலாயில் 30, தமிழில் 20 என சுமார் 250 வலைப்பூக்களை கொள்கை ஆய்வுக் கழகத்தின் ஆய்வாளர்கள் ஆராய்ந்தனர்.

தமிழ் வலைப்பூக்கள் பற்றிய ஆய்வை கொள்கை ஆய்வுக் கழகத்தின் சிறப்பு ஆய்வு ஆலோசகர் திரு அருண் மகிழ்நனும் ஆய்வு உதவியாளர் குமாரி நந்திதா தாசும் மேற்கொண்டனர்.

தமிழ் வலைப்பூக்களை நிர்வகிப்போரில் 85 விழுக்காட்டினர் ஆண்கள் என்றும் 15 விழுக்காட்டினரே பெண்கள் என்றும் ஆய்வு கூறுகிறது.

மேலும் பெரும்பாலான வலைப்பதிவாளர்களின் வலைப்பூக்கள் 6 முதல் 10 ஆண்டுகளாக செயல்பாட்டில் உள்ளன.

மற்ற மொழி வலைப்பூக்களிலிருந்து தமிழ் வலைப்பூக்களை வேறுபடுத்திக் காட்டிய ஒரு முக்கிய அம்சம், தமிழ் வலைப்பூ பதிவாளர்களில் சுமார் 53 விழுக்காட்டினர் பொறியியல் நிபுணர்கள் என்பதே.

அவர்கள் கலை, கலாசாரம் சம்பந்தப்பட்ட அம்சங்கள் குறித்தே அதிகமாக பதிவேற்றம் செய்கின்றனர்.

இந்த வலைப்பதிவாளர்களில் அரசியல் பேசுவோர்கூட அதிகமாக இந்திய அரசியல் குறித்தே கருத்துகளைப் பதிவு செய்கின்றனர்.

பொதுவாக தமிழ் வலைப்பூக்களில் தமிழின் தரம் உயர்வாக இருப்பதாகவும், ஒருசில வலைப்பதிவுகளை எழுதுவோர் தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் எழுதுவதாகவும் திரு அருண் மகிழ்நன் கூறினார்.

"தமிழ் வலைப்பூ பக்கங்களை எடுத்துக் கொண்டால், அவற்றை எழுதுவோரில் அநேகமானவர்கள் சிங்கப்பூரர் அல்லாதவர்கள். அவர்கள் இந்தியா அல்லது இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து நீண்ட காலமாக இங்கு வசிப்பவர்களாக இருக்கிறார்கள்.

"உள்ளூர் விவகாரங்கள் பற்றி அவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாமல் இருக்கலாம் அல்லது சிங்கப்பூர் பற்றியோ மக்கள் ஒருங்கிணைப்பு பற்றியோ தெரியாமல் இருக்கலாம்," என்றும் விளக்கினார் திரு அருண் மகிழ்நன்.

மற்ற சமூக ஊடகங்களின் வரவால் வலைப்பதிவில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறைந்துவரக் கூடும் என்ற யூகமும் முன்வைக்கப்பட்டது.

சொந்த வலைப்பூக்களில் கருத்துகளைப் பதிந்துவந்த பலர் இப்போது ஃபேஸ்புக்கின் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பியிருக்கக்கூடும் என்றும் கொள்கை ஆய்வுக் கழகத்தின் ஆய்வாளர்கள் கூறினர்.